# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 03.08.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 16555/SCIC/2024</u>**

திருமதி.வி. விஜயா க/பெ.எஸ்.விஸ்வநாதன் - மேல்முறையீட்டாளர்
எண்.172/258, 19வது குறுக்கு தெரு
T.N.H.B., வாலாஜாபேட்டை-632 513
இராணிப்பேட்டை மாவட்டம் - 603 403.
Phone:98539 48959, 94880 49723

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
வட்டத் துணை ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம்
கலவை வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம் - 632 506.

## <u>ஆணை</u>

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **01.07.2023** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 02.08.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 07.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 05.09.2023 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 16.09.2023 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01/07/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ வட்டத் துணை ஆய்வாளர், கலவை வட்டாட்சியர் அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் ஆணைப்படி, சென்னை-5 நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையரால் ந.க.எண்.5/20403/2020 (நி.அ.) நாள் 15/03/2021-ன்படி அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் நீதிமன்றத்தில் வழக்கு மட்டுமே உள்ள

நிலத்தை அளவை / மறு நில அளவை செய்வதில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தடை ஏதும் கிடையாது என குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் 09/06/2023 அன்று என் நிலத்தை சர்வே செய்ய இருப்பதாக அறிவித்து பின்பு நீதிமன்ற வழக்கு நிலுவையை மேற்கோள் காட்டி சர்வே செய்ய முடியாது என்று நிராகரிப்பதற்கான காரணங்களின் விவரங்களைத் தருக" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.வி.விஜயா அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.த.ரேவதி, வட்டத் துணை ஆய்வாளர், கலவை வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 02/08/2023 மற்றும் 05/09/2023 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்ததோடு, அச்சொத்தில், நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் கூறினார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ வட்டத் துணை ஆய்வாளர், கலவை வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் மேற்குறிப்பிட்ட நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலை குறித்து, மனுதாரருக்கு 31/08/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16555/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத் துணை ஆய்வாளர்
வட்டாட்சியர் அலுவலகம்
கலவை வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம் - 632 506.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திருமதி.வி. விஜயா க/பெ.எஸ்.விஸ்வநாதன்
எண்.172/258, 19வது குறுக்கு தெரு
T.N.H.B., வாலாஜாபேட்டை-632 513
இராணிப்பேட்டை மாவட்டம் - 603 403.
Phone:98539 48959, 94880 49723

RG/Sr.PC